**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC. No.41/2023 | அரசுதரப்பு சாட்சி P.W.3 | |
| பெயர் | ராஜேஷ் | கிராமம் | |
| தந்தை பெயர் | செல்வராஜ் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.P.Manikanda Prabu, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 15.07.2026
As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.
எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் தாலுகா காடுவெட்டி விடுதியில் வசித்து வருகிறேன். நான் ஆலங்குடியில் உள்ள மைஸ் கேக் என்ற பேக்கரியில் வேலை செய்து வருகிறேன். எங்களது கடை ஆலங்குடி- கறம்பக்குடி ரோட்டில் வடகாடு முக்கம் அருகே உள்ளது. கடந்த 11.03.2022ம் தேதி இரவு 07.30 மணியளவில் நான், அற்புதகண்ணன், கார்த்திகேயன், ஹரிவிக்னேஷ், ராஜ்குமார் ஆகியோர் பணியில் இருந்தோம். அப்போது நான் கேக் தயாரிக்கும் உள்அறையில் இருந்தேன். சத்தம் கேட்டு வெளியில் வந்தபோது ஆஜர் எதிரிகள் எங்கள் கடையில் பிரச்சனை செய்து விட்டு சென்றுவிட்டார்கள். Birthday கேக் வாங்கிகொண்டு பணம் கொடுக்காமல் தகராறு செய்துள்ளார்கள். இதை மட்டும் தான் அங்கு பணி செய்தவர்கள் சொன்னார்கள். மறுநாள் போலிசார் பேக்கரி கடைக்கு வந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உளள 2வது கையெழுத்து என்னுடையது. அது அ.சா.ஆ.3. கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. அது அ.சா.ஆ.4. என் முன்பாக எந்தவித ஆயுதமும் பணமும் கைப்பற்றவில்லை. போலிசார் விசாரித்தபோது இதைதான் சொன்னேன். (சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya

Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தபோது 11.03.2022ம் தேதி மாலை சுமார் 07.30 மணியளவில் நான் மைஸ் கேக் பேக்கரியில் பணிசெய்து கொண்டிருந்தபோது எங்கள் கடைக்கு ஆஜர் எதிரிகள் இருவரும் குடிபோதையில் வந்தார்கள் என்றும் ½ கிலோ பிறந்த நாள் கேக் தயார் செய்ய சொல்லிவிட்டு அதில் பழனி என்ற விஜய் பெயரை எழுதும் படியும் சொன்னார்கள் என்றும் எங்கள் பேக்கரி கடையில் இருந்த கார்த்திகேயன் என்பவர் கேக்கிற்கு பணம் கேட்டபோது என்னிடமே காசு கேட்பியா தவுடியா மகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டிஅவரின் சட்டைக்கு பின்னால் இருந்த அரிவாளை எடுத்து கல்லாபெட்டிக்கு மேலே வைத்தார் என்றும் அப்போது கல்லாபெட்டியில் இருந்த பணத்தை எடுங்கடா என்று மிரட்டியதாகவும் நாங்கள் பயந்து கொண்டு இருந்தபோது கார்த்திகேயனின் வலதுகையில் அரிவாளை பின்பக்கம் திருப்பி தாக்கியதுடன் அரிவாளை கார்த்திகேயனின் கழுத்தில் வைத்து மிரட்டி அவருடன் வந்த 2வது எதிரி கார்த்திகேயனின் சட்டைப்பாக்கெட்டில் இருந்த ரூபாய் 500 நோட்டு ஒன்றும் ரூபாய் 100 நோட்டு ஒன்றும் மொத்தம் 600 ரூபாயை பறித்துகொண்டு கேக்கிற்கு பணமும் கொடுக்காமல் ரவுடி மணி என்றால் ஊருக்கே தெரியும் என்று கேட்டுபாபருங்கடா என்று சொல்லி மிரட்டி விட்டு சென்றுவிட்டார்கள் என்றும் அதன்பிறகு 12.03.2022ம் தேதி காலை 10.15 மணிக்கு ஆலங்குடி கல்லுக்குண்டு கரை புளியமரம் அருகில் நின்றுகொண்டிருந்த இந்தவழக்கின் எதிரிகளான மணி என்ற மணிகண்டன் ஆலங்குடியை சேர்ந்த வீரையா என்ற 2 நபர்களையும்நானும் ராஜ்குமார் என்பவரும் அடையாளம் காட்ட போலிசார் அவர்களை காரணம் கூறி கைது செய்தபோது மணி என்ற மணிகண்டன் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்என்றும் அதில் சாட்சியாக இருந்து நானும் ராஜ்குமார் என்பவரும் கையெழுத்துசெய்தோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஒப்புதல்

வாக்குமூலத்தின் அடிப்படையில் மணிகண்டனிடம் கொள்ளை அடித்த பணம் செலவுபோக மீதம் இருந்த பணம் ரூபாய்200 ஐயும் சம்பவத்தின் போது பயன்படுத்திய அரிவாளையும் மணிகண்டன் ஆஜர் செய்தது போலிசார் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும் அதற்கு சாட்சியாக இருந்து தான் மகசரில் நானும் ராஜ்குமார் என்பவரும சாட்சிகையெழுத்து செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் பல வழக்குகள் தொடர்புடைய ரவுடிகள் என்பதால் அவர்களுக்கு பயந்து அவர்களை காப்பாற்றுவதற்காக நடநத உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

11.03.2022ம் தேதி எதிரிகள் நான் வேலை செய்யும் கடைக்கு வரவில்லைஎன்று சொன்னாலும் அவர்கள் அங்கு பிரச்சனை செய்யவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/–ராஜேஷ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**